S.T.C. No. : 311/2021

PW1 : கொடி சந்திரசேகரன், த/பெ. கொடி வைரத்தேவர்

Date : 13.02.2024.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. 2017 ஆம் வருடம் எதிரிக்கு தொழில் முடக்கம் ஆகி, தொழிலை நிறுத்தியதால் எதிரியிடம் நான் எந்த பணமும் கொடுக்கல், வாங்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 2017 கடைசியிலும், 2018 ஆம் வருடம் ஆரம்பத்திலும் எனக்கும், எதிரிக்கும் எந்த மனகசப்பும் இருந்தது இல்லை என்றால் சரிதான். 30.05.2021 ஆம் தேதியில் காசோலை வங்கியிலிருந்து திரும்பப்பட்டதால், எதிரிக்கு நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். மேற்படி அறிவிப்பில், எதிரி என்னிடம் பல சந்தர்பங்களில் பெரிய தொகை கடனான கொடுத்து வாங்கியுள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் குறிப்பிட்ட 2015 - 2016 வரைக்குள் பெரிய தொகை கடனாக கொடுத்து வாங்கியதாக சொல்லியுள்ளேன். மேற்படி அறிவிப்பில் 2021 வருடம் ஜனவரி மாதம் 2வது வாரம் எதிரி என்னிடம் தொடர்பு கொண்டு பணம் கேட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

2. 17.02.2021 ஆம் தேதியில் பணம் எதிரிக்கு ரொக்கமாக கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் எதிரியை ஏப்ரல் மாதம் 3வது வாரத்தில் தொடர்பு கொண்டு, கொடுத்த பணத்தை திருப்பி கேட்டதாகவும், அந்த சமயத்தில் எதிரி வழக்கு காசோலையை கொடுத்ததாகவும், மேற்படி அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு விசாரணை வந்த பிறகு, நான் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அதில் 17.02.2021 ஆம் தேதியில் என் வீட்டில் வைத்து பணம் கொடுத்ததாகவும், அதற்கு எதிரி ஆதரமாக 17.05.2021 ஆம் தேதியில் பின்தேதியிட்ட காசோலையை கொடுத்தாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் 30.05.2021 ஆம் தேதியில் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிற்கு எதிரி 21.06.2021 ஆம் தேதியில் பதில் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரியல்ல. நான் 30.05.2021 ஆம் தேதியில் நான் எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை எதிரி பெறாமல் எனக்கு திரும்ப வந்துவிட்டது.

3. பின்னர் 15.06.2021 ஆம் தேதியில் மற்றொரு வழக்கறிஞர் அறிவிப்பை எதிரிக்கு

அனுப்பினேன். அந்த அறிவிப்பிற்கு எதிரி 21.06.2021 ஆம் தேதியில் பதில் அறிவிப்பு அனுப்பினார். அந்த பதில் அறிவிப்பில் 5 பக்கங்கள் பல விபரங்கள் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் அதை மறுத்து நான் மறு அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான். நீதிமன்றத்தை நாடியதால் நான் அனுப்பவில்லை. என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் 17.05.2021 ஆம் தேதிக்குரிய காசோலையை என்னிடம் கொடுத்ததாகவும், அதை அன்றே வசூலுக்கு வங்கியில் போட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. 2015, 2016 வருட காலங்களில் எதிரியிடமிருந்து எந்த ஆவணமும் கடைசி வரை வாங்கவில்லை என்றால் சரிதான். தனியார் நிறுவனங்களுக்கு நான் கடன் கொடுக்கும்பொழுது, அந்த நிறுவனத்தின் பின்புலங்களை நன்கு விசாரித்துகொண்டுதான் கடன் கொடுப்பேன் என்றால் சரிதான். நான் கடன் கொடுத்தவர்கள் திருப்பி செலுத்த முடியாமல் பல காசோலை வழக்குகள் நடத்தி வருகிறேன் என்றால் சில வழக்குகள் நடத்தி வருகிறேன்.

4. 2015 ஆம் ஆண்டு எதிரி என்னிடம் கடன் பெற்றபொழுது, எதிரியிடமிருந்து சொத்து ஆவணங்கள் மற்றும் வெறும் கையொப்பமிட்ட காசோலை மற்றும் வெறும் கையொப்பமிட்ட பிரோநோட் ஆகியவற்றை எதிரியிடமிருந்து வாங்கிகொண்டுதான், கடன் கொடுத்தேன் என்றால் சரியல்ல. 2017 ஆம் வருடம் கடைசியில் எதிரி தொழில் முடக்கமாகி தொழிலை நிறுத்திவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. 2018 ஆம் வருடத்திலிருந்து தான் வாங்கிய தொகைகளை பெறும் அளவில் வட்டியுடன் செலுத்தி முடித்துவிட்டதாகவும், கடன் வாங்கியபோது ஆதரமாக கொடுத்திருந்த ஆவணங்களை என்னிடம் திருப்பி கேட்டார் என்றாலும், அதை நான் தரமறுத்துவிட்டேன் என்றாலும் சரியல்ல. நான் பைனான்ஸ் செய்வது சம்பந்தமாக தாசில்தார் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளிடம் உரிமம் பெற்றுள்ளேனா என்றால் இல்லை. 29.07.2019 ஆம் தேதியில் சுமார் 30 சென்ட் நிலத்தை எதிரி எனக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி கிரையம் சம்பந்தமாக எந்த கிரைய ஒப்பந்தமும் ஒரு சென்ட் விலை சம்பந்தமாகவோ போடவில்லை. நேரடியாக பேசி கிரையம் முடித்து கொண்டோம். மேற்படி கிரையத்திற்கு எந்த தேதியில் எவ்வளவு பணம் பட்டுவாடா விபரம் செய்யப்பட்டது என்று பண பட்டியல் விபரம் உள்ளதா என்றால் இல்லை.

5. 30.10.2019 ஆம் தேதியில் 15 ஏக்கர் 11 சென்ட் நிலம் எனக்கு கிரையம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் 30.10.2019 ஆம் தேதியில்

பதிவு செய்யப்பட்டது ஆனால் மேற்படி ஆவணத்தை நான் 29.07.2019 அன்றே சார்பு பதிவாளர் அலுவலகத்தில் தாக்கல் செய்துவிட்டேன். மேற்படி ஆவணத்தில் கிரைய ஒப்பந்தமோ, செண்ட் விலை சம்பந்தமான விபர குறிப்போ செய்துகொள்ளவில்லை என்றால் சரிதான். மேற்படி கிரையத்திற்கு எந்த தேதியில் எவ்வளவு பணம் பட்டுவாடா விபரம் செய்யப்பட்டது என்று பண பட்டியல் விபரம் உள்ளதா என்றால் இல்லை. என்னுடைய மைத்துனர் பெயர் மலர்வண்ணன் என்றால் சரிதான். மேற்படி மலர்வண்ணனுக்கு எதிரி நேரடி நட்பு உண்டு. எப்போது இருந்து மலர்வண்ணனுக்கு எதிரியை தெரியும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 27.04.2021 ஆம் தேதியில் என் மைத்துனர் மலர்வண்ணனுக்கு எதிரி 4 ஏக்கர் சொத்தை பதிவு செய்து கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 30.10.2019 ஆம் தேதியிட்ட கிரைய பத்திரத்தை பதிவு செய்யும்பொழுது, நடைமுறை குறைகளினால் நிறுத்தி வைத்திருந்தார்கள் என்றால் சரிதான். Valuation சம்பந்தமாக பிரச்சனை இருந்ததால் நிறுத்தி வைத்திருந்தார்கள். மேற்படி கிரைய பத்திரத்தின் ஆவண எண் 31/2019 என்றால் எனக்கு ஞாபகம் இல்லை.

6. 15.02.2021 ஆம் தேதியில் மேற்படி நிலுவையில் இருந்த கிரைய பத்திரம் தவறுகள் சரி செய்யப்பட்டு ஆவண எண் 524/2021 ஆக பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். என் மீது எதிரி நில அபகரிப்பு புகார் கொடுத்தார் என்றால் சரிதான். நான் இந்த வழக்கு தாக்கல் செய்தபின், மேற்படி வழக்கை கொடுத்தார். எதிரி என்மீது கந்துவட்டி புகார் கொடுத்தாரா என்றால் அது பற்றி எனக்கு ஞாபகம் இல்லை. நான் கடன் கொடுக்கும்பொழுது, கடன் வாங்கியவர்கள் என்னிடம் ஆவணங்கள் எதுவும் ஆதரமாக கொடுத்திருந்தால் கடனை திருப்பி அடைத்தவுடன் மேற்படி ஆவணங்களை அதற்கான ஒப்புகை ரசீது வாங்கிகொண்டு நான் திருப்பி கொடுத்துவிடுவேன் என்றால் சரியல்ல. ஒரு சில நபர்கள் என்னிடம் ஆவணங்களை கொடுப்பார்கள் அதை திருப்பி கொடுக்கும்பொழுது ரசீது எதுவும் வாங்கமாட்டேன். வா.சா.ஆ. 1 வழக்கு காசோலையை எதிரியால் தொழில் நிறுவனத்தில் தொடர்ந்து பராமரிக்கப்பட்டு என்னிடம் கடந்த 2015 ஆம் ஆண்டில் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி காசோலையை எதிரியின் கையொப்பத்தை தவிர மற்ற அனைத்து விபரங்களும் என்னுடைய கங்கா பைனான்ஸ் நிறுவன ஊழியர்களால் நிரப்பப்பட்டது என்றால் சரியல்ல. இதேபோல் இன்னும் காசோலைகள் எதிரி மற்றும் அவரது குடும்பத்தினரால் கையொப்பம் மட்டும் இட்டு

ஆதரமாக என்னிடம் கொடுக்கப்பட்டு, அவை இன்றைக்கும் என்வசம் உள்ளது என்றால் சரியல்ல.

7. 2018 ஆம் ஆண்டிற்கு பிறகு எதிரி தான் கடன் வாங்கிய தொகையில் அதிக வட்டியுடன் செலுத்திவிட்டதாகவும், ஆனால் நான் ஆதரமாக பெற்ற ஆவணங்களை தராமல், வெவ்வேறு நபர்கள் மூலமாக மேற்படி ஆவணங்களை பயன்படுத்தி எதிரி மீது வழக்கு தாக்கல் செய்வேன் என்று மிரட்டினேன் என்றாலும், அவ்வாறு மிரட்டி எதிரியிடமிருந்து என் பெயருக்கும், மேற்படி என் மைத்துனர் பெயருக்கும் சொத்துகளை கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. பலகோடி பெருமான சொத்துக்களை எந்தவித பிரதிபலனும் கொடுக்காமல் பலதவணைகளில் கிரைய தொகையை கொடுத்ததாக பொய்யாக சொல்லி எதிரியிடமிருந்து என் பெயருக்கும் என் மைத்துனர் பெயருக்கும் மோசடியாக கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி என் மோசடி செயல்களை எதிரி தன் பதில் அறிவிப்பில் கூறியுள்ளார் என்றால் சரியல்ல.

8. 30.10.2019 ஆம் தேதியில் நிலுவையிலிருந்த கிரைய பத்திரம் தவறுகள் சரி செய்யப்பட்டு 2021 ஆம் ஆண்டு ஊர்ஜிதம் செய்த பிறகுதான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2018 ஆம் ஆண்டிற்கு பிறகு எதிரி தான் கடன் வாங்கிய தொகையில் அதிக வட்டியுடன் செலுத்திவிட்டதாகவும், ஆனால் நான் ஆதரமாக பெற்ற ஆவணங்களை தராமல், வெவ்வேறு நபர்கள் மூலமாக மேற்படி ஆவணங்களை பயன்படுத்தி எதிரி மீது வழக்கு தாக்கல் செய்வேன் என்று மிரட்டினேன் என்றாலும், அவ்வாறு மிரட்டி எதிரியிடமிருந்து என் பெயருக்கும், மேற்படி என் மைத்துனர் பெயருக்கும் சொத்துகளை கிரையம் வாங்கியுள்ளேன் என்றாலும் அதன்பின்பும் கூட என்னுடைய பேராசையால் எதிரியிடமிருந்து மேலும் பணம் பரிக்கவேண்டும் என்ற நோக்கத்தில் மோசடியாக இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய பெற்றோரோ, என்னுடைய மூதாதையர்களோ, நில சுவான்தர்களோ, தொழில் அதிபர்களோ கிடையாது என்றால் சரியல்ல. எனது தந்தை கொடி வைரதேவர் 43வயதில் இறைவனடி சேர்ந்தார். அப்போது எங்கள் வசம் 27 ஏக்கர் விவசாய நிலம் இருந்தது. மேலும் எனது தகப்பனார் மதுரை, மணப்பாறை, காரைக்குடி, மாயவரம் அரசு ஒப்பந்தகாரராக இருந்தார். நான் கடந்த 15 வருடங்களுக்கு முன்பு எந்த வசதி வாய்ப்பு இல்லாமல் இருந்தேன் என்றும், வழக்கிற்காக பொய்யாக

சொல்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றாலும் தள்ளுபடி செய்யகூடியது என்றாலும் சரியல்ல.